# பொருள்

இந்நகராட்சியில் தார்சாலைகள் 137.95 கி.மீ கற்சாலைகள் 2.80 கி.மீ மற்றும் மண்சாலைகள் 0.835 கி.மீ சிமெண்ட் சாலைகள் 56.99 கி.மீஎன மொத்தம் 198.575 கி.மீ சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி சாலைகளில் சமீபத்தில் பெய்த கனமழை போன்ற இயற்கை சீற்றத்தினாலும் அதிகஅளவில் பேருந்து மற்றும் வாகனங்கள் இயக்கத்தினாலும் 38.482 கி.மீ சாலைகள் சேதமடைந்துள்ளன. மாவட்டத்தின் தலைநகராகவும் மாவட்ட மக்களுக்கு பிரதான பகுதியாகவும் விளங்கும் இந்நகரில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கான கல்வி நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள், வழிபாட்டு தலங்கள், தினசரி சந்தைகள், பேருந்து நிலையங்கள் வணிக நிறுவனங்கள் ,மருத்துவமனைகள், மற்றும் பலதரப்பட்ட உணவு விடுதிகள் என அதிக அளவில் உள்ளதாலும் ஏராளமான வெளிமாநில மக்கள் வந்து செல்வதாலும் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படுவதால் மேற்படி சாலைகள் சேதமுற்றுள்ளதன் காரணமாக பொதுமக்கள் மற்றும்வாகன போக்குவரத்திற்கு இடையூறுகள் ஏற்பட்டு அடிக்கடி விபத்துகள் ஏற்படும் நிலையும் உருவாகியுள்ளது.

கடந்த ஆண்டில் 12–வது நிதிக்குழு பரிந்துரை திட்டம் மற்றும் நகராட்சி பொது நிதியுடன் 4.200 கி.மீ சாலைகள் செப்பனிடப்பட்டுள்ளது. மேலும் மேற்படி சேதமுற்ற 38.482 கி.மீ சாலைகளை சரிசெய்ய பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களிடமிருந்து புகார்கள் வந்தவண்ணம் உள்ளன. மேற்படி சேதமுற்ற சாலைகள் அனைத்தையும் சரிசெய்யும் அளவிற்கு நகராட்சி நிதிநிலை சீராக இல்லை என்பதால் சிறப்பு சாலைகள் திட்டம் 2010–11–ன் கீழ்அரசுக்கு பிரேரணை சமர்ப்பித்து முழு மானியத்துடன் கீழ்கண்ட சாலைப்பணிகளை மொத்தம் ரூ.**1083.30** இலட்சம் மதிப்பில் வரிசை கிரமமாக முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டுவதுடன் ஏற்கனவே இந்நகர்மன்ற தீர்மானம் எண்.384 நாள் 20.08.2010–ல் மேற்படி திட்டப்பணி தொடர்பாக அனுமதி வழங்கியதை ரத்து செய்யவும் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எ | சாலைப்பணிகள் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| I) | **சிமெண்ட் சாலைகள் விபரம்** | |
| 1 | டென்னிசன் ரோடு | 40.00 |
| 2 | விக்டோரியா பிரஸ்ரோடு டதியம்மாள் ரோடு | 20.00 |
| 3 | வடசேரி பேருந்து நிலைய அணுகுசாலை | 48.50 |
| 4 | இன்னாசி தாணுவன் தெரு | 9.00 |
| 5 | எம்.ஜி.ஆர் நகர் சாலை ( வார்டு 51) | 16.00 |
| 6 | கம்பளம் தெரு மற்றும் ரெயில்வே பீடர் ரோடு | 29.00 |
| 7 | அந்தோணியார் தெரு (வார்டு 26) | 4.50 |
| 8 | அந்தோணியார் தெரு ( வார்டு 46) | 5.00 |
| 9 | பால்விலாஸர் தெரு | 14.80 |
| 10 | பத்திரகாளி விளை தெரு | 8.50 |
| 11 | கேசரி தெரு | 15.00 |
| 12 | மீட் தெரு | 13.50 |
| 13 | சிவன்கோவில்தெரு | 20.00 |
| 14 | ஹவ்வாந கர் | 50.00 |
| | மொத்தம் | **293.80** |

| II ) | **<u>தார்ச்சாலைகள் விபரம்</u>** | |
|---|---|---|
| 1 | வெட்டூர்ணிமடம் சந்திப்பு முதல் டபிள்யூ.சி.சி. கல்லூரி சந்திப்பு வரை | 48.00 |
| 2 | சாலை ரோடு | 85.00 |
| 3 | ஹோம் சர்ச் முதல்டதி பள்ளி சந்திப்பு வரை | 12.50 |
| 4 | குருசடி முதல் வட்டகரை சந்திப்புவரை | 17.00 |
| 5 | ஆராட்டுரோடு ரோட்டில் எஸ்.எம்.ஆர்.வி.பள்ளி முதல் காமராஜர் சிலை வரை | 5.50 |
| 6 | நாகராஜகோவில் ரதவீதிகள் | 30.00 |
| 7 | இருளப்பபுரம் முதல் பறக்கைரோடு சந்திப்பு வரை ( காதர் மருத்துவமனை அருகில்) | 23.00 |
| 8 | வேப்பமூடு சந்திப்பு முதல் டதி பள்ளி சந்திப்பு வரை | 30.00 |
| 9 | பறக்கைரோடு முதல் கன்னங்குளம் ரோடு | 15.50 |
| 10 | சரக்கல்விளை குறுக்கு தெருக்கள் மற்றும் வளனார் சுந்தரலிங்கம் தெருக்கள் | 30.00 |
| 11 | இராமன்புதூர் சந்திப்பு முதல் ஏ ஆர் கேம்ப் சாலை வரை ( தட்டான்விளை சாலை) | 34.00 |
| 12 | பொன்னப்பநாடார்காலனி சாலை | 20.00 |
| 13 | கீழ மறவன்குடியிருப்பு சாலை | 34.00 |
| 14 | சைமன்காலனி ரோடு டெரிக் சந்திப்பு முதல் கன்கார்டியா பள்ளி வரை | 36.00 |
| 15 | கிறிஸ்து நகர் முதல் நடுகாட்டு இசக்கியம்மன்கோவில் வரை | 26.00 |
| 16 | அவ்வை சண்முகம் சாலை | 70.00 |
| 17 | வாட்டர் டேங் ரோடு | 46.00 |
| 18 | நடுகாட்டு இசக்கியம்மன்கோவில் ரோடு | 10.00 |
| 19 | நெசவாளர் காலனி ரோடு | 50.00 |
| 20 | சற்குணவீதி ஓடை ரோடு | 19.00 |
| 21 | குருசடி முதல் புன்னைகாட்டுவிளை சந்திப்பு வரை | 26.00 |
| 22 | டிஸ்லரி ரோடு | 20.00 |
| 23 | WCC காலேஜ் சந்திப்பு முதல் டவர் சந்திப்பு வரை | 15.00 |
| 24 | மேல சூரங்குடி ரோடு | 9.00 |
| 25 | கணேசபுரம் சாலை | 15.00 |
| 26 | சிதம்பரநாதன் தெரு | 6.00 |
| 27 | எஸ்.எல்.பி. தென்புற சாலை | 7.00 |
| 28 | தடி டிப்போமெயின்ரோடு | 7.50 |
| 29 | கேசவதிருப்பாபுரம் ரோடு | 14.00 |
| 30 | கச்சேரி ரோடு | 17.00 |
| 31 | விவேகானந்தா சாலை | 11.50 |
| | மொத்தம் | **789.50** |

அலுவலக குறிப்பு – 1. மேற்கண்ட பழுதடைந்த சாலைகளை மேம்பாடு செய்ய முழு மானியம் வழங்க கேட்டு அரசுக்கு பிரேரணை அனுப்ப அனுமதிக்கலாம்

2. நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்கள் நே.மு.க.எண்.25910/2010/இ3 நாள் 06.08.2010 மற்றும் 19.08.2010–ல் அறிவுறுத்தப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி பிரேரணை தயார் செய்யப்பட்டுள்ளது.

3. இந்நகர்மன்ற தீர்மானம் எண்.384 நாள் 20.08.2010–ஐ ரத்து செய்யலாம்.

கோப்பு எண்.14427/2010/இ3

**தீர்மான எண் : 387 – அ.கு, அனுமதிக்கப்பட்டது**